தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 4-9-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் பள்ளி மாணவர்களுக்கான ஓவியப்போட்டி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இளங்கலை உணவு பதன்செய் பொறியியல் மாணவர்கள் நடத்தும் தேசிய அளவிலான கருத்தரங்கு “ஃபுட் எக்ஸ்ப்ளோர் 14” (FOODXPLORE’14) செப்டம்பர் 26, 2014 அன்று நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியின் முன்நிகழ்வாக கோவை மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி வரும் செப்டம்பர் 7ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) அன்று வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் காலை 8:30 மணிக்கு தொடங்கி நடைபெற இருக்கிறது. இதில் வெற்றிபெறும் மாணவர்களின் படைப்புகள் ஐக்கிய நாட்டு உணவு மற்றும் வேளாண்மை அமைப்பால் (FAO) நடத்தப்படும் உலக உணவு தினவிழா ஓவியப் போட்டிக்கு தேர்வு செய்யப்படும்.

“குடும்ப வேளாண்மை, உலகிற்கு உணவூட்டல், புவிநலம் பேணல்” என்ற தலைப்பில் மாணவர்கள் ஓவியங்களை வரையவேண்டும்.

5 முதல் 8 வயதுவரை, 9 முதல் 12 வயதுவரை, 13 முதல் 17 வயதுவரை என மூன்று பிரிவுகளின் கீழ் மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ஒரு பிரிவுக்கு இரண்டு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். பங்கேற்க விரும்பும் மாணவர்கள் அடையாள அட்டையுடன் பள்ளிச் சீருடையில் வரவேண்டும்.

மேலும் தகவல்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 9698069606 (இரா. நித்யமகேந்திரன்), நான்காம் ஆண்டு உணவு பதன்செய் பொறியியல்.

மக்கள் தொடர்பு அலுவலர்